# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

## அ.சா. 3 (LW 4)

| **பெயர்** | **திரு.பெருமாள்** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/ பெயர்** | முத்து | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **20.07.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நெட்டுத்தெரு முனிசிபல் காலனியில் குடியிருந்து வருகிறேன். திண்டுக்கல் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். இவ்வழக்கில் இறந்த சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணி எனது பேரன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 18.03.2019 அன்று எனது பேரன் சூர்யபிரகாசை என்எஸ் கம்யூனிட்டி ஹால் அருகே வெட்டி விட்டதாக எங்கள் தெருவை சேர்ந்த ஒருவர் இரவு 09.00 மணி வாக்கில் சொன்னார், அந்த விசயத்தை கேள்விப்பட்டு குடும்பத்துடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனை போய் பார்த்தேன். அப்போது மருத்துவரிடம் கேட்ட போது அவருக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்து விட்டதாக சொன்னார். அதன் பின்பு நான் , அங்கே வந்திருந்தவர்கள் திண்டுக்கல் நகர் வடக்கு காவல்நிலையத்திற்கு சென்று என் மகன் மூலமாக புகார் கொடுத்தேன். புகாரை எனது மகன் பாண்டியன் சொல்லச் சொல்ல அவரது நண்பர் விக்ரம் என்ற ராஜசேகர் எழுதினார். புகாரிலுள்ள 1 வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரில் கையெழுத்திட்டது என் மகன் தான், அவரது கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும். என் மகன் உடல்நலம் சரியில்லாமல் சம்பவத்திற்கு பின்பு 4,5 மாதம் கழித்து இறந்து விட்டார். புகார் கொடுக்கும் போது நான் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலிசார் விசாரணையில் எனது மகனின் நண்பர் புகார் எழுதிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவரது பெயரை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகாரை காவல்நிலையத்தில் போலிசார் முன்பு எழுதினார்கள் என்றால்

இல்லை, வெளியில் சென்று பேப்பர் வாங்கி வந்து எழுதப்பட்டது. அந்த பேப்பரில் என்ன விவரங்களை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை, எனது மகன் சொல்லச் சொல்ல விக்ரம் எழுதினார். நான் சொன்னமாதிரி நானோ, எனது மகனோ புகாரை எழுதவில்லை என்றாலும் போலிசார் எழுதியதில் எனது மகனும் நானும் கையெழுத்திட்டோம் என்றால் சரியல்ல. என் மகன் பாண்டியன் மீது கொலை வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை, மற்றொரு மகன் சந்திரன் பெயரில்தான் கொலை வழக்கு இருந்தது, அவரும் இறந்து விட்டார். என் மகன் மீது கொலை வழக்குகள் இருந்ததால் எங்களுக்கும் பலருக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. புகார் போலிசார் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.**

**மறு விசாரணை - இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.21 20:44:34 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.